# கலைகளும் தமிழ் இலக்கியமும்

**முனைவர் கோ.ஜெகதீஸ்வரி**
தலைவர், தமிழ்த்துறை
கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோவை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

'ஆய கலைகள்' என்பவை அவ்வையார் கையாண்ட சொற்கள். கம்பர் எழுதியதாகக் கூறுவதும் உண்டு. ஆய்ந்து எண்ணப்பட்ட கலைகள் என்று விரியும். இவை அறுபத்து நான்கு என்று சொல்வதும் வழக்கம். இந்த எண்ணிக்கை சரியா என்பதிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அபிதான சிந்தாமணி, தமிழ்க் கலைக்களஞ்சியம் போன்ற தொகுப்புக்களில் உள்ள பட்டியல், வடமொழியில் கூறப்படும் 'சாஸ்திரங்கம்' என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இரசவாத வித்தை, ஆவியுடன் பேசுதல், கூடுவிட்டுக் கூடுபாய்தல் போன்றவையும் சொல்லப்பட்டுள்ளன. இவற்றில் சாதூரியம், பயிற்சி, திறமை, கவர்ச்சி இருக்குமேதவிர, கலையுணர்வு அதிகமாக இருக்கும் என்பது நினைக்கத்தக்கது. கலைப்பாடங்களாகிய பொருளாதாரம் வரலாறு போன்றவையும், அறிவியல் கணிதப் பாடங்களும் இந்தப் பட்டியலில் காணப்படுகின்றன. இவை மறு ஆய்வுக்கு உரியவை.

## நோக்கம்

எது கலை? என ஒரு வினா எழுவது இயல்பு. பலர் பலவாறாகச் சொல்லியிருக்கிறார்கள். மேனாட்டுத் திறனாய்வாளர்கள் கூறியவற்றையே இன்னும் கூறிக்கொண்டிருக்கிறோம். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்து சங்கப்பாடல்களில் மூழ்கி இதற்குப் பொருள் காணல் வேண்டும். 'சுவைஞனாக இருந்து பார்ப்போன் அல்லது கேட்போன் ஒருவனுக்குப் பார்க்கப்படும் பொருள் அல்லது கேட்கப்படும் ஒலி (இசை) எது இன்பம் தருகிறதோ அழகுணர்ச்சியை ஊட்டுகிறதோ அதுதான் கலை. அதைத் தருபவன்தான் கலைஞன். படைப்போன் சுவைஞன் இருவருக்கும் இடையில் ஊடகமாக இருப்பது கலை. படைப்போனின் மனஉணர்ச்சி. ஒரு கலையைப் படைக்கும்போது ஏற்படும் மெய்ப்பாடுகள் - சுவைஞனிடத்தில் ஏற்படுத்தும் வகையில் அமைவதே உண்மைக்கலை. இல்லை என்றால், அழகாயிருந்தாலும் இன்பமே தந்தாலும் அது முழுமையடையாது. படைப்போனின் தொழில்திறமையை அது காட்டலாம். கலையை வெளிப்படுத்தாது இசையோ, ஓவியமோ, பாட்டோ, சிற்பமோ, கோயிலோ எதுவாக இருக்கட்டும் படைத்தவன் கொண்ட உணர்ச்சியைச் சுவைஞன் நெஞ்சில் எழுப்பவேண்டும்.

**பொருள்**

கலை என்பது பொதுச்சொல். ‘கலா’ என்ற வடசொல்லிலிருந்து வந்தது என முன்னர் குறிப்பிட்டனர். பின்னாளில் பாவாணர் போன்ற மொழியியல் அறிஞர்கள் கலை, தூய தமிழ்ச்சொல்: கல் என்ற வரியிலிருந்து வந்தது சான்றுகள் காட்டி மெய்ப்பித்தார்கள்.

தமிழ்ப் பேரகராதி ‘கல்’ என்பதற்குப் பத்துக்கு மேற்பட்ட பொருள் தந்துள்ளது. படித்தல், பயின்றறிதல், கல், மலை, மணி என்பவை சில. பயின்றறிதல் நல்ல சொல். ‘கல்லா மா’ என்று குறளைச் சான்று காட்டி உள்ளது (811) கல் - கல்லுதல் - கலை என ஒரு நேர்கோட்டு வளர்ச்சி நோக்கத்தக்கது. கல்லுதல், தோண்டுதல், மண்ணுக்குள் புதைந்து கிடப்பதைத் தோண்டியெடுக்கப்படுவது கல்: அப்படியே மனதுக்குள் புதைந்து கிடக்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவது கலை. கல், தொழிற்பெயர் விகுதி ‘ஐ’ சேர்ந்து கலை ஆகிறது. நில் ஐ - நிலை என்பது போல.

கல் வெறுமனே வெளிவராது. அதைக் கொண்டுவர முயற்சி, கருவிகள் தேவை. கலையும் வெளிப்பட ஓர் உந்துதல் தேவை. ‘உணர்ச்சி’ என்னும் பிண்டம் திரண்டு பீறிட்டு வருவது கலை. அது பல வடிவங்களில் மாறுகிறது. உள்ளிருந்து புறத்துக்கு வருவது என்ற நிலை இன்று கல்வியில் இல்லை. புறத்திலிருந்து வன்முறையில் உள்ளே புகுத்தப்படுவது ஆகிட்டது. விளைவு? கலையுணர்ச்சியும் இல்லாதாக நிலை தோன்றிவிட்டது. முண்ணைத் தோண்ட வேண்டும். எவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவு நீர் ஊறும். அது போல, மனதுள்ளும் ஆயிரமாயிரமாகப் புதைந்து கிடப்பதும் வெளிப்பட்டாலே சமூகம் பயனடைந்து வாழும்.‘தொட்டனைத்து ஊறும் கல்வி’ என்று தொடங்கும் குறள் இதைத்தான் சுட்டுகிறது.

இந்த உண்மைக் கலையை உணர அறிவோ ஆராய்ச்சியோ தேவையில்லை. கலை, சாத்திரம் என்று பொருள்பட்டு ஞானத்தையும் குறிக்கும். ‘உவமையில்லாக் கலைஞானம்’ என்று சேக்கிழார் இதைக் குறிப்பார். சாதி, சமயம், குலம், தொழில், கல்வி போன்ற செயற்கை எல்லைகளைத் தாண்டியே கலை வாழ்கிறது. வளர்கிறது. ஓரெழுத்து கூடப்படிக்காத வேடர்குலம் சார்ந்த கண்ணப்பனைக் ‘கலை மலிந்த சீர் நம்பி’ என்று வேதம் படித்த அந்தண சுந்தரர் பாடித்தொழ என்ன காரணம்? யாரோ ஒரு சிற்பி வடித்த கல்லுக்கும் கடவுளைக் கண்டு தொழுது அழுது உருகி அரற்றித் தன்னையும் இழக்கும் அளவுக்கு வேடன் உணர்ச்சியால் சிற்பியின் கலைப்படைப்பால் மடைமாற்றம் ஆனானே, அதனால்தான் சுந்தரர் அப்படிப் பாடினார். கலையின் வெற்றி அது. கல்லுக்குள் கடவுளைக் காண்பது எல்லாரும் செய்யக்கூடியதா? உண்மைச் சுவைஞனுக்கே அது இயலும்.

**வகைகள்**

இன்றைய திறனாய்வாளர்கள் பலவகையாகக் கலைகளைப் பகுத்திருக்கிறார்கள். நுண்கலைகள் என்றும் அழகுக்கலைகள் என்றும் போற்றப்படும் ஓவியம், சிற்பம், ஆடல், இசை, கவிதை, கட்டடக்கலை போன்றவை மக்கள் நெஞ்சங்களில் உண்மைக் கலைகளாகப் பல நூற்றாண்டுகள் பதிந்துவிட்டன. இவை வெளிப்பட ஏதோ ஒரு துணைப் பொருளும் வேண்டும். தூரிகை, உளி, சதங்கை, குழல், எழுத்து, கல், ஏதோ ஒன்று வேண்டும். அதைப் பயன்படுத்தக் கையும் காலும் விரலும் குரலும் வேண்டும். இவை ஒன்று கூடியே கலை முழுமையடைகிறது.

**மனிதன்**

உயிர்களின் படைப்பில் மேம்பட்டவன் மனிதன். இவன் ஒருவனே ஐம்புலனின்பத்தை முழுதாகச் சுவைக்கத் தெரிந்தவன். ‘கண்டு கேட்டு உயிர்த்து உற்று அறியும்’ ஐம்புலனும் இவனிடத்தில் பணி செய்கின்றன. இந்த இன்பம் - களையின்பம், அழகின்பம் - தெரியாதவன் மனிதன் அன்று. ‘விலங்கொடு மக்களனையர்’ என்றே வள்ளுவர் சொல்வார். மக்கள் பெற்றுள்ள நாகரிகத்தின் அடையாளம் புறத்துள்ள வீடு, வாசல், ஊர்தி முதலிய பொருள்கள் மட்டுமல்ல. நெஞ்சில் கனிந்து வெளிவரும் கலையுணர்வும்தான். இந்தப் பின்னணியில்தான் சங்க இலக்கியத்தைக் கற்கவும் காணவும் வேண்டும். அப்பொழுதுதான் கலைச்சுவையைத் துய்க்க முடியும்.

துய்த்தல் ஆழமான பொருள் உடையது! பலகாலும் பல நூல்களிலும் பயின்று வருவது. முழு ஈடுபாட்டுடன், விருப்பத்துடன், ஆர்வத்துடன் ஒன்றைக் 'கண்டு கேட்டு உண்டு' அநுபவித்து. எதைச் சுவைக்கிறோமோ, அதுவாகவோ ஆகிவிடுவது. ஓவியத்தைப் பார்க்கும்போது ஓவியமாக இசையைக் கேட்கும்போது இசையாக' அது அதுவாக ஆவதே துய்ப்பு. அதைத் தராத உறுப்புகளால் என்ன பயன் என்பார் வள்ளுவர்? பாடலுக்கு ஒத்துவராத பண்ணும், கண்ணோட்டமில்லாத கண்ணும் பயனற்றவை. 'நல்ல இசையைக் கேட்டுத்துய்க்காத காது 'கேட்பினும் கேளாத் தகையதே!

சங்க இலக்கியத்தில் நுண்கலைகள் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன. குறிப்பாக ஆற்றுப்படை நூல்களில் இசை, ஆடல், இசைக்கருவிகள், அணிகலன்கள் பற்றிய செய்திகள் மிகுதி.

**சங்க இலக்கியம்**

'ஆடுகளத்து' வீறுடன் நடக்கும் நாடக மகளிர் (பெரும்பாண்) தொனாத்த இசையை எழுப்பும் நல்யாழுடன் ஆகுளி.·. பதளையாகிய முழவுக்கருவிகளை எடுத்துச் செல்லும் சில்வளை விறலி (புறம் : 64), மதுரையில் 'கண்ணுள் வினைஞர்' கட்டிய மாடமாளிகைகள் (மதுரைக் காஞ்சி), வள்ளுகிர்ப் பேரியாழ், இடனுடைப் பேரியாழ்' தாங்கிச் செல்லும் பாணர்கள், 'புலனமுது உண்மாராக' வாழ்ந்த அறிவும் உணர்வும்மிக்க வித்தகப் புலவர்கள் - இந்தக் கலைஞரும் கவிஞரும் ஆக்கிப் படைத்த கலைகள் எனப் பலவற்றைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. ஆனால் பொருள்களால் செய்யப்பட்ட ஓவியம், சிற்பம், கட்டிடங்கள் இவையும் இவற்றைச் செய்யப் பயன்பட்ட பொருள்களும் அழிந்துபோயின. இசை எழுப்பி நெஞ்சை உருக்கிய யாழ் இப்போதில்லை. தண்ணுமை, சிறுமுழா, பதலை இல்லை. இவை போன்ற பல மறைந்தன. பாடப்பட்ட பண்கள் வழக்கிலிருந்து ஒழிந்தன. படிமங்களும் பாவைகளும் மண்ணுண்டு போயின என்றாலும் அவையெல்லாம் எட்டுத்தொகை, பத்துப்பாடல்களில் இன்னும் அழியாமல் இருக்கின்றன.

**சில சான்றுகள்**

பேரரசன் தன் குழந்தையைத் தழுவுகிறான். அரசனுக்கே உரிய விலைமதிப்பற்ற ஆடை, அணிகலன்கள் 'திருமகள் விரும்பும்' செல்வ மார்பு. ஆனால் குழந்தைக்கு இவற்றின் மதிப்பு தெரியாது.

குழந்தைச் செல்வம் 'சிறு கைநீட்டிக் குறுகுறு நடந்து' ஓடிவருகிறது. சின்னச் சின்னக் கையும் காலும், சோற்றுப் பருக்கையை விரல்களால் அளைந்து அள்ளி வாய், உதடு, கன்னம், வயிறு, நெற்றி என உடம்பெல்லாம் சிந்திய நெய்ச்சோறு மன்னன் இந்தக் கோலத்துடன் குழந்தையைத் தூக்கியணைத்து "இப்படி மனத்தை இன்பமயக்கத்தில் ஆழ்த்தும் குழந்தை இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா?" என்று கேட்கும் உவகைச் செருக்கு. சற்று கண்ணை மூடி இதை நினைத்தால் உள்ளே விரியும் ஓவியம், சிற்பம். பாண்டியன் அறிவுடைநம்பி கொடுத்து வைத்தவன்.

**யானை ஓவியம்**

அது ஒரு மலை. அதன் சரிவில் ஒருகுடிசை. தினைப்புனத்துள் குறிஞ்சிப் பெண். குறத்தி, கொடிச்சி, நீண்ட கூந்தலையுடையவளாகத் தனக்குரிய குறிஞ்சிப் பண்ணில் பாடிக்கொண்டே வேலை செய்கிறாள். அவள் பாடலையும் இசையையும் கேட்டு, மலையில் சுற்றித் திரிந்த பெரிய யானை மயங்கியது. விளைந்து முற்றிய தினைக் கதிர்களை உண்ணவும் மறந்து அசையாமல் நின்றபடியே அந்தக் களிறு இசையின் தூங்கியது. இசையில் தூக்கம் இது (அகம் 102).

**அரச கட்டில்**

பாண்டியன் நெடுஞ்செழியனின் தேவி அமர்ந்திருக்கும் அழகிய கட்டிலின் மேம்பட்ட மரச்சிற்ப அழகை நெடுநல்வாடை பின்வருமாறு பதியவைத்துள்ளது. 'நாற்பது வயது முற்றி, போர்செய்தபோது சிறந்த ஆண்யானையின் நீண்ட தந்தங்களை எடுத்துச் 'சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்' ஆகிய தச்சன் கூர்மையான உளியால் சீவ அமைத்த கால்களை உடையது. இலைத் தொழில் இடையில்

அமைக்கப்பட்டது. நான்கு மூலைகளிலும் திரண்ட இடங்கள் உடையது. ஒரு குடத்துக்கும் அடுத்த குடத்துக்கும் இடையே, உள்ளிப் பூண்டைப் பதித்ததுபோன்ற வேலைப்பாடு பொருந்தியது. கட்டிலில் முத்துக்களால் ஆன தொடர்மாலைகள் நாற்புறமும் தொங்குகின்றன. பார்ப்பதற்குப் பலகனி போன்று அமைப்பு. கட்டிலில் படுக்கும் பகுதி புலியின் வரிகள் போல வேயப்பட்ட தகடுகளால் ஆனது. மேற்புறத்தில் விதானம். அதில் பலவகை ஓவியம். படுக்கை அன்னத்தின் மென்மையான தூவியால் நிரப்பப்பட்டது. அதன்மீது துணி விரிக்கப்பட்டிருந்தது. அதனுள்ளே மலர்களை வைத்து மணம் ஊட்டியிருந்தனர். ஆங்கு 'புனையா ஓவியம்' போல அமர்ந்து விதானத்து ஓவியங்களைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் பேரரசி. திங்களைப் பிரியாது இருக்கும் உரோகிணிக்காட்சி மேல்புறம். கணவனைப் பிரிந்திருக்கும் தன்னிலை எண்ணிக் கண்ணீர் அரும்பும் சோகச்சித்திரம்' (நெடுநல்வாடை, 110-160). இன்றைய செல்வர் வீட்டிலும் இப்படி ஒரு கட்டில் இருக்கும் என்பது ஐயமே! ஈராயிரமாண்டுகட்கு முன்னர் தமிழ்க்கலைஞன் செய்த அற்புதம் இது.

**ஆயர் மகள்**

பெரும்பாணாற்றுப்படையில் சிற்றூர்க் காட்சி இது. ஒரு ஆயர்குடிசை. வாசலில் ஆடுகள். அவை தின்ன வசதியாகத் தழைகளை மரக்கொம்பில் தாழக்கட்டி இருக்கிறார்கள். வெள்ளாடும் செம்மறியாடும் நிறைந்துள்ள வாசல். அந்தக் குடிசையில் உறங்கிய ஆயர்மகள் வைகறையில் பறவைகள் எழும்போது தானும் எழுந்து தயிர் கடைகிறாள். மத்தின் ஓசை புலியுறுமுவது போல இருக்கிறது. வெண்ணெய் எடுத்த பின், பானையில் மோரை எடுத்துக்கொண்டு விற்கப்போகிறாள். நல்ல வருவாய். மோர்ப்பணம், நெய்ப்பணம் என்று தனியாகப் பிரித்து மோர்ப்பணத்தால் விருந்தோம்பல் செய்கிறாள். நெய்ப்பணத்தால் பொன் வாங்காமல் பண்டங்களாகிய எருமை, பசு வாங்குகிறாள். பொருளியல் சிந்தனையை உள்ளடக்கிய சொற்சித்திரம் (147-168).

**கட்டட அமைப்பு**

மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படையில் நகரமைப்பு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வெயிலும் நுழைய முடியாத, ஆனால் குயில்கள் நுழைந்து இசைபாடும் சோலைகள் மிகுந்த நகரங்கள். இரண்டு பெரிய கரைகளுக்கு நடுவே பாய்ந்துவரும் பேராறுபோல நீண்டு கிடக்கும் கடைத்தெருக்கள். கரைகளுக்கு மாற்றாகச் 'செம்பிட்டு உருக்கிச்' செய்த மாளிகைகள். பொன்னை உருக்கியது போலவும் பளிங்கை உருக்கியது போலவுமான பூச்சுக்கள். இப்படியே போகிறது நகர் வருணனை. கட்டடக்கலையின் முன்னோடிகளாகத் தமிழர்கள் இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் ஹரப்பா, மொகஞ்சதாரோவில் மட்டுமல்ல. சங்க இலக்கியங்களிலிருந்த பாவைகள், பதுமைகள், கொடிகள் பற்றிய குறிப்புகள் அளவிறந்தவை.

உணர்ச்சி ததும்பும் காட்சிகளை ஓவியம், சிற்பம், கட்டிடம் என்பவற்றில் பதியவைத்துள்ள கலைஞர்களுடைய வாழ்வு அன்று சிறப்புக்குரியதாயில்லை. வறுமையே அவர்களின் செல்வமாக இருந்தது. பாடியும் ஆடியும் பிழைத்த அவர்கள், பல நாட்கள் வறுமையால் வாடியும் வதங்கினர். இடைக்கழிகாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையில் இந்த 'இன்மையின் கொடுமையைக் கண்டு நடுங்குகிறோம்.

அதுதான் கலைஞனின் குடிசை. இன்னும் கண்திறவாத குட்டிகளுக்குப் பாலூட்ட முடியாமல் குரைக்கும் நாய் ஒரு புறம். மூங்கில் கட்டுக்கள் கயிறறுந்து கிடக்கும் பழஞ்சுவரான அடுக்களை ஒருபுறம். புழுதியும் கரையானுமாக உள்ள அங்கு முளைத்துள்ளது காளான். அந்த விறலி தன் ஆடலால் காண்போர் நெஞ்சை மகிழ்விக்கும் ஆடுமகள் கூரிய நகத்தால் குப்பைவேளைக் கீரையைக் கிள்ளிக் கொணர்ந்து வேக வைக்கிறாள். அதில் போடுவதற்கு உப்புகூட இல்லை. பார்ப்போர் கேவலமாக நினைப்பார்களே என்பதற்காகக் கதவை அடைத்து உண்ணுகிறார்கள், (130-140).

இதுதான் கலையின் நிலைமை. செல்வவளத்தைப் பாடும் கலைஞன். வறுமைச் சிறுமையைப் பாடவும் தவறவில்லை. ஓவியம், சிற்பம், கோபுரம், மாளிகை, ஏழிசை, யாழ், முழவு என எங்கோ வானில் மிதந்தாலும் மண்ணில் அவன் வாழ்ந்த உண்மை வாழ்க்கையைப் பதிவு செய்யவும்

தவறவில்லை. ‘ஈரும் பேனும் அவன் தலையில் நனைந்து நனைந்து கசங்கியும் அழுக்கேறியவுமாக இருந்த ஆடை. ஈரும் பேனும் இருந்து இறைகூடி வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த துள்ளல் கிழார்’ என்ற வரிகளில் (பெரும்பாண். 79-81) அவலத்தின் பிழிவு எனல் வேண்டும்.

கலைஞன் உணர்ச்சி மிக்கவன். உணர்ச்சியால் வாழ்பவன். இன்பதுன்ப உணர்ச்சிகளின் எல்லைக்குச் செல்பவன். உனக்கு விருப்பமானவர்க்கும் உன்னை விரும்புபவர்க்கும், என் அன்புக்குரியவளே கொடு, கொடு என்று தான் பெற்றதைக் கொடுப்பதால் வரும் வறுமையே அவன் சொத்து. அப்படித் தன்னைத் தேய்த்துக்கொண்டதால்தான், இலக்கியத்தில் கலைஞன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.